**PPSC Circular No:AD/TO/ENG/2026/01**

# கிழக்கு மாகாண திணைக்களங்களுக்கு இலங்கை பொறியியலாளர் சேவையின் பொறியியலாளர் (சிவில்) பதவிக்கான ஒப்பந்த அடிப்படையிலான (முழு நேரக் கடமை) ஆட்சேர்ப்பு.

கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/EPC/E/26/PPSC-Gen/24 ஆம் இலக்க 2026.07.21 ஆந் திகதிய அனுமதிக்கமைவாகவும், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் 2026.07.31 ஆந் திகதிய கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாகவும் பின்வரும் திணைக்களங்களுக்கு பொறியியலாளர் (சிவில்) பதவிக்கு இலங்கை பொறியியலாளர் சேவையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் (முழு நேரக்கடமை) ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கமைய, இவ்விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளையுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க முடியும். தகைமைபெறும் விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சையானது கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வுச் சபையால் நடாத்தப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2026.08.28 ஆகும்.

**01.** தீர்மானித்துள்ள வெற்றிடங்கள் மற்றும் வெற்றிடம் நிலவும் திணைக்களங்களின் விபரம்.

| இல | அலுவலகம் | ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு செய்யவுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | மாகாண சுகாதார அமைச்சு | 01 |
| 02 | நீர்ப்பாசனத் திணைக்களம் | 01 |
| 03 | உள்ளூராட்சித் திணைக்களம் | 01 |

**02. ஒப்பந்த காலப்பகுதி:**
நியமனம் செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி அல்லது இப்பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படும் வரை, இவற்றுள் எது முந்தியதோ அக்காலப்பகுதி வரைக்கும் செயல்வலுப்பெறும்.

**03. தகைமைகள்**
பொதுவான தகைமைகள்:-

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. நன்னடத்தை உள்ளவராகவும், உடல் உள ஆரோக்கியம் உள்ளவராகவும் பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளப் போதுமான உடற்தகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதிக்கு உடன் முன்னரான மூன்று (03) ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும்.
IV. உத்தியோகத்தர் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் 2:17 ம் பந்திக்கு அமைவாக முறையாக ஓய்வு பெற்றுள்ளவராக இருத்தல் வேண்டும்.
V. குறித்த உத்தியோகத்தர் ஒழுக்காற்று நடவடிக்கை, வினைத்திறனின்மை, திருப்தியற்ற சேவைக்காலம் ஆகிய காரணங்களினால் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவராக இருத்தல் ஆகாது.
VI. குறித்த உத்தியோகத்தரது ஓய்வு பெறுவதற்கு முன்னரான சேவைக்காலம் திருப்திகரமாகவும் ஒழுக்காற்று தண்டனை பெறாதவராகவும் இருக்க வேண்டும்.

**குறிப்பு:** கிழக்கு மாகாணத்தில் போதியளவான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத விடத்து ஏனைய மாகாணங்களிலிருந்து கிடைக்கப்றெும் விண்ணப்பதாரிகளின்

விண்ணப்பங்கள் மற்றும் 3 III இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனையை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படும்.

**04. வயது** :- விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதி அன்று 65 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**05. சம்பளம்:-** அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 03/2018 இல் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கமைவாகவும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 10/2025 இல் குறிப்பிடப்பட்ட விதி முறைகளுக்கமைவாகவும் மாதாந்த கொடுப்பனவுகள் தீர்மானிக்கப்படும்.

**06. ஆட்சேர்ப்பு முறைமை:-**

I. இப்பதவிக்கான ஆட்சேர்ப்பானது, மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களினை நிரப்பும் நோக்குடன் நடாத்தப்படும் நேர்முகத்தேர்வில் பெறப்படும் புள்ளிகளின் திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். **நேர்முகத் தேர்வில் புள்ளிகள் வழங்கப்படும் புள்ளித் திட்டமானது கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட பின்னர் மாகாண ஆளுநரது அனுமதிக்கமைய மேற்கொள்ளப்படும்.**

II. மேற்குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமையில் தேவையானவிடத்து ஏதாவது மாற்றங்கள் செய்வது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைவாக கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரினால் தீர்மானிக்கப்படலாம்.

III. நேர்முகத்தேர்வின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டவர்களின் இறுதிப் பெயர் பட்டியலானது கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் சிபாரிசுடன் கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்படும்.

**07. விண்ணப்பிக்கும் முறை**

I. தங்கள் முழுமையான விபரம் அடங்கிய (கோரப்பட்ட தகைமைகள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கலாக) சுயவிபர விண்ணப்பத்திணை சுயமாகத் தயாரித்து விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு ‘‘செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், கன்னியா வீதி, வரேதயநகர், திருகோணமலை. எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

II. விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் AD/ENG/Con.Basis/2026/01 என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

ஐ.லியாகத் அலி,<br>
செயலாளர்,<br>
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு.<br>
2026.08.04